P.N NO 279 நாள் :- 30.12.11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை –30 .12. 2011

தமிழகத்தை தாக்கிய "தானே" புயலின் காரணமாக இன்று (30.12.2011) கடலூர் மாவட்டத்தில் மரம் மற்றும் சுவர் இடிந்து விழுந்ததில் 13 பேரும், புயல் மழை காரணமாக 8 பேரும் உயிரிழந்தனர், விழுப்புரம் மாவட்டத்தில் மரம் விழுந்ததில் ஒருவரும், மின்சாரம் தாக்கியதில் ஒருவரும், திருவள்ளூர் மாவட்டத்தில் மழை காரணமாக ஒருவரும் மின்சாரம் தாக்கியதில் ஒருவரும், மற்றும் சென்னை மாவட்டத்தில் சுவர் இடிந்து விழுந்ததில் ஒருவரும் ஆக மொத்தம் 26 பேர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

"தானே" புயலின் காரணமாக மரணமடைந்த 26 நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9